- 6 APR 2009

<u>சுருக்கம்</u>

தணிக்கை– உள்ளாட்சி தணிக்கை – நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (சென்னை தவிர) – நீண்ட கால நிலுவைத் தணிக்கை தடையை நிவர்த்தி செய்ய மாநில மற்றும் மாவட்ட அளவிலான இரு உயர்மட்டக் குழுக்கள் – பணிகள் மற்றும் அதிகாரங்கள் வரையறுத்து – ஆணைகள் வெளியிடப்பட்டது – சில திருத்தங்கள் – வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை) எண். 54 நாள் 30.3.2009

*திருவள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 17*

மீண்டும் படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 65 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 22.5.2007.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண். 44966/ 2001/எல்3, நாள் 17.10.2008.

---

<u>ஆணை:</u>

மேலே பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை நீங்கலாக இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை எழுப்பிய தணிக்கைத் தடைகளை தீர்வு செய்யவும், மாவட்ட குழுவின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், மாவட்ட குழுவால் தீர்வு செய்ய இயலாத தணிக்கைத் தடைகளை தீர்வு செய்யவும், மாநில அளவில் நகராட்சி நிர்வாக ஆணையர் தலைமையிலான ஒரு குழுவும், மாவட்ட அளவில் நிதி ஆலோசகர் தலைமையிலான ஒரு குழுவும் நியமித்து ஆணைகள், பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. மேற்கண்ட ஆணையின்படி மாவட்ட அளவிலான குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 மாதத்திற்கு ஒரு முறையாவது மற்றும் மாநில அளவிலான குழு தேவைக்கேற்ப வருடத்தில் குறைந்தது 2 கூட்டமும் நடத்தப்பட வேண்டும் என்றும், தற்பொழுது மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைப் பத்திகள் கணிசமான அளவில் (ஆகஸ்டு 2008 மாத இறுதியில் 255592) நிலுவையாக உள்ளதாலும், தணிக்கைத் துறையினரிடம் கலந்தாலோசித்து திட்டமிடப்படும் நாட்களில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகத்தில் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் முக்கியமானவற்றை கவனம் செலுத்தும்பொருட்டு, குழுத்தலைவர் என்ற முறையில் மாவட்ட உயர்மட்டக்குழு கூட்டத்தில் நிதி ஆலோசகர் குறிப்பிட்ட கால வரையறையில் கலந்துகொள்ள இயலாத நிலை எழுகிறது என்றும் எனவே, மாவட்ட உயர்மட்டக்குழு உரிய காலவரையறைப்படி நடைபெறுவதற்கு ஏதுவாக மாவட்ட உயர்மட்டக் குழு தலைவராக நிதி ஆலோசகருடன், சம ஊதிய விகிதத்தில் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கூடுதல் நிர்வாக இயக்குநரும் செயல்பட அனுமதிக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டு, அரசு ஆணையில் உரிய திருத்தங்கள் வெளியிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசினை கோரியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் அரசு ஆணை (நிலை) எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறை நாள் 22.5.2007ன் பத்தி 2ல் "I. மாநில அளவிலான உயர்மட்டக்குழு" மற்றும் "II மாவட்ட அளவிலான உயர்மட்டக்குழு" ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களுக்கு பதிலாக கீழ்க்கண்ட உறுப்பினர்களை பதிலீட்டகற்றிடாக அமைத்து அரசு ஆணையிடுகிறது.

<u>I. மாநில அளவிலான உயர்மட்டக்குழு</u>

| | | |
|---|---|---|
| i) நகராட்சி நிர்வாக இயக்குநர் | ) | தலைவர் |
| ii) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் | ) | துணைத்தலைவர் |
| iii) அந்தந்த மாநகராட்சி ஆணையர்/ நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் | ) | உறுப்பினர் |
| iv) நகராட்சி நிர்வாக இயக்குநக தலைமைப் பொறியாளர்/ கண்காணிப்பு பொறியாளர்" (தலைமைப் பொறியாளர் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத நிலையில் கண்காணிப்பு பொறியாளர் கலந்து கொள்வார்) | ) | உறுப்பினர் |
| v) நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக நிதி ஆலோசகர் | ) | உறுப்பினர் மற்றும் குழு கூட்டுபவர் |

<u>II. மாவட்ட அளவிலான உயர்மட்டக்குழு</u>

| | | |
|---|---|---|
| i) நகராட்சி நிர்வாக இயக்குநக நிதி ஆலோசகர்/ (நிதி ஆலோசகர் வேறு முக்கியமான பணிகளில் ஈடுபட்டிருந்தாலோ அல்லது விடுப்பில் சென்றிருந்தாலோ) நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர்களில் ஒருவர் தலைவராகச் செயல்படுவார். | ) | தலைவர் |
| ii) (அ) நகராட்சிகளைப் பொறுத்தவரையில் மண்டல துணை இயக்குநர் (உள்ளாட்சி நிதி தணிக்கை) | ) | துணைத்தலைவர் |
| (ஆ) மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில் அந்தந்த மாநகராட்சியின் துணை இயக்குநர் (உள்ளாட்சி நிதித் தணிக்கை) | ) | |
| (மாநகராட்சிகளில் துணை இயக்குநர் பணியிடம் இல்லாத நிலையில் மண்டல துணை இயக்குநர் (உள்ளாட்சி நிதித் தணிக்கை)) | ) | |
| iii) (அ) நகராட்சிகளைப் பொறுத்த மட்டில் மண்டல நிர்வாகப் பொறியாளர் | ) | உறுப்பினர் (பொறியியல் பிரிவு) |

| | | |
|---|---|---|
| (ஆ) மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில் நகரப் பொறியாளர் (City Engineer) | X X | உறுப்பினர் (பொறியியல் பிரிவு) |
| ( நகரப் பொறியாளர் இல்லாத மாநகாட்சிகளில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி நிர்வாகப் பொறியாளர்கள்) | X X | உறுப்பினர் (பொறியியல் பிரிவு) |
| iv)(அ)சம்பந்தப்பட்ட நகராட்சிகளின் ஆணையர்கள் | X | உறுப்பினர் |
| (ஆ) சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளின் ஆணையர்கள் | X | உறுப்பினர் |
| (இ) சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளின் உதவி கோட்ட ஆணையர்கள் | X X | சிறப்பு அழைப்பாளர். |
| v) (அ) நகராட்சிகளைப் பொறுத்தவரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர். | X X | உறுப்பினர் மற்றும் குழு கூட்டுபவர் |
| (ஆ) மாநகராட்சிகளை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளின் உதவி ஆணையர் (கணக்கு) | X X | உறுப்பினர் மற்றும் குழு கூட்டுபவர். |

(மேற்கூறிய மாநில மற்றும் மாவட்ட உயர்மட்டக் குழுவில் பதவி வகிப்போர் சம்பந்தப்பட்ட தணிக்கைத் தடை இருப்பின், அவர்கள் உயர்மட்டக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளவும், தணிக்கைப் பத்திகள் குறித்து முடிவு எடுக்கவும் கூடாது )

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 877/FS/P/09 நாள் 23.3.2009-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

டாக்டர். நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-600 005.
உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர், சென்னை-600 108
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
அனைத்து நகராட்சி ஆணையர்கள் (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு) சென்னை-600 005.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-600 001.
இயக்குநர் கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை-600 035.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை-600 018.
மாநில தலைமைக் கணக்காயர் (தணிக்கை) சென்னை-600 018.
நகல்: நிதித் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் )துறை, சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநு2/பேரு.1/மாநு.2) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.